நிலையில் பழுதடைந்திருக்கிறது. ஆகவே, பகுதியாக எடுத்து செய்வதைவிட இச்சாலைக்கு முன்னுரிமைக் கொடுத்து வலிவலம்-நாகலூர் சாலையை விரைவாக அமைப்பதற்கு அதுவும் இந்த ஆண்டே இந்த வேலையை சிறப்புத் திட்டத்திலாவது எடுத்து செய்து முடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் சிறப்பு கவனம் செலுத்தி விரைவாக செய்து கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சாலை மட்டும் இந்த ஆண்டு போடப்படுவதில்லை. பல நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர் நீளம் கொண்ட கிராமச் சாலைகளை அரசு போட்டுக்கொண்டிருக்கிறது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், கிராமச் சாலைகள் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் வாயிலாக போடப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்துருவின்மீது ஆய்வு செய்யப்பட்டு அப்படி அவசியம் இருப்பின் இந்த ஆண்டே இது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 119. திருமதி இரா. பாண்டியம்மாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

119–

உசிலம்பட்டி ஆதிதிராவிட மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

* *7542*–திருமதி இரா. பாண்டியம்மாள்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டியிலுள்ள ஆதிதிராவிட நலத்துறையைச் சேர்ந்த மாணவர்கள் விடுதி வாடகை கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்குக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்குச் சொந்தமாக கட்டிடம் கட்டுவதற்கான திட்ட மதிப்பீடுகள் கோரப்பட்டுள்ளன. மதிப்பீடுகள் பெறப்பட்டதும் நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலித்து கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அன்பு தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இல்லை என்று சொல்லுவதற்கே இடம் இல்லை என்ற சொல்லுக்கு ஏற்ப மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு பணம் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது? எப்போது இப்பணி ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான மதிப்பீடுகள் கோரப்பட்டிருக்கின்றன. மதிப்பீடுகள் வந்தவுடனே வருகிற நிதி ஆண்டில் இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 120. டாக்டர் மு. சீனியம்மாள். மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்.

120–

காதி கிராம சர்வோதய சங்கத்தின் மூலம் நூற்பு நிலையம் அமைத்தல்.

**** 21534–டாக்டர் மு. சீனியம்மாள்:***

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா––

(அ) அவினாசி, அன்னூர் ஒன்றியம், மாணிக்கம் பாளையத்தில் காதி கிராம சர்வோதய சங்கத்தின் மூலம் நூற்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?